## ஜனவரி - 21

**"ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்." - மத் 16:24**

சிலுவையை சுமப்பதற்கும் தன்னைத்தானே வெறுப்பதற்கும் மிக நெருங்கிய பந்தம் உண்டு. இருப்பினும் இவ்விரண்டிற்கும் உள்ள ஒரு வேறுபாட்டைக் கவனித்தல் வேண்டும். தன்னைத்தானே வெறுத்தல் என்பது குறிப்பாக எந்தவித மனக்கசப்புமின்றி சாத்வீகமாக கீழ்ப்படிந்து நம் ஆண்டவருக்காக எதையும் தாங்கிக் கொள்ளுதல், சிலுவையை சுமத்தல் என்பது இதைவிடக் கூடுதலானது. குறிப்பாகச் சொல்வதென்றால், தேவனுடைய ஊழியத்திலே தன்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ளுதல். இது பொதுவாக நம்முடைய இயல்பிற்கு வித்தியாசமானது. நம்மை நாமே வெறுப்பதில் விசுவாசம் காட்டுகிறோமென்றால், அது தைரியத்தையும் நாம் கொண்டுள்ள உற்சாகத்தையும் காட்டும். சிலுவையை சுமத்தல் என்பது வெற்றியைக் குறிக்கும். எல்லா எதிர்ப்புகளையும் மேற்கொண்டோம் எனப் பொருள்படும். நம்மை நாமே நம்முடைய தன்னலத்தை ஒதுக்கி விடுகிறோம் என்றால் அதுவும் ஒரு வெற்றிதான். அது நம் இதயத்திற்குள் பெறுகின்ற வெற்றி அதனைப் பிறர் அறியமாட்டார்கள். அதைப்பற்றி பிறர் அறிய வேண்டிய அவசியம் இல்லை. நாம் நம் ஆண்டவரின் பரிபூரண ஆசிர்வாதங்களைப் பெற வேண்டுமென்கிற அவா நமக்கு இருக்குமென்றால், பிறர் இதைக் குறித்து அறியாதிருத்தல் வேண்டும். எப்படி இருப்பினும் நாம் சுமக்கிற சிலுவையை பிறர் காண இயலும். ஒரு சிறிதேனும் காண இயலும். நம்மோடு நெருங்கிப் பழகிறவர்களுக்கு மாத்திரமே இது தெரியவரும் . குறிப்பாகச் சொல்வதென்றால், நம்மோடு சேர்ந்து இடுக்கமான பாதையின் வழியாக செல்வோர் மாத்திரமே இதை அறிவார். **- Z ’00, 118 (R 2615).**

சுய வெறுப்பு என்பது நம்முடைய உரிமைகளை விட்டு விலகி இருப்பது எனப்பொருள் கொள்ளக்கூடாது. கிறிஸ்தவ முறையின்படி இப்படி சிலர் அர்த்தம் கொள்வர். நம்முடைய ஆண்டவருக்காக நம்முடைய உரிமைகளை விட்டுக்கொடுப்பதே இதன் கருத்தாகும். சிலுவையை சுமப்பது என்பது நமது சித்தத்தை ஆண்டவருடைய ஊழியத்திற்குக் கீழ்ப்படியச் செய்தல். விசுவாசம், நம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிதல் ஆகியவற்றை நம் வாழ்க்கையின் அலுவல்களில் ஈடுபடுத்திக்கொள்ளுதல் குறிப்பாக விருப்பத்தகாத சூழ்நிலைகளை நாம் எதிர் நோக்க வேண்டும்போது நம்முடைய இந்த சிலுவையை சுமப்பதில் நாம் அவருடைய சித்தத்திற்கு நம்மை ஈடுபடுத்தி விசுவாசம், அன்பு, தைரியம், கீழ்ப்படிதல் ஆகியவற்றில் நிலைத்துநிற்க வேண்டும். இப்படிப்பட்ட சுயவெறுப்பையும் சிலுவை சுமத்தலையும் வழக்கப்படுத்திக் கொள்பவர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் உண்மையான சீடர்கள் எனக் கருதப்படுவார்கள். இவர்கள் மாத்திரமே தங்கள் ஜீவிய ஓட்டத்தின் முடிவில் கிறிஸ்துவின் மகத்தான இராஜ்யத்தில் பங்கு பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். **- P ’31, 192.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஆதி 22:1-12; 2சாமு 24:24; மத் 8:19-22; 10:37-39; 13:44-46; 19:12,21; லூக் 5:11,27,28; 14:33; 18:27-30; 21:2-4; அப் 20:22-24; ரோம 6:1-11; 14:1-22;15:1-5; 1கொரி 8:13; 9:12,15,18,19,23-27; 10:24; பிலி 3:7-9; தீத் 2:12; 1பேது 2:11,16; 4:1,2.**

**கோபுர வாசிப்பு : Z ’06, 267 (R 3843).**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதன் பலன் என்ன?**